# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 21.6.2019 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கும் மோட்டார் வாகன பராமரிப்புத் துறை சார்பில் மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு தானியங்கி பணிமனைகளில் அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கு புத்துணர்வு பயிற்சி அளித்திடும் வகையில் 1 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்களை திறந்து வைத்தார்கள்.

2016–17ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறை மானிய கோரிக்கையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசுத் துறை ஓட்டுநர்களுக்கு புத்துணர்வுப் பயிற்சி அளிக்கவும், புதிதாக பணியில் சேர்ந்தவர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கவும் மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளில் அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, சேலம் அரசு தானியங்கிப் பணிமனையில் 30.6.2018 அன்று அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு தானியங்கி பணிமனைகளில் அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கு புத்துணர்வு பயிற்சி அளித்திடும் வகையில் 1 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்கள், வாகனங்கள் குறித்தான உரிய செய்முறை விளக்க உபகரணங்கள், மேம்படுத்தப்பட்ட கட்டமைப்பு மற்றும் வகுப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் பராமரிப்புத் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு.கே.செந்தில்வேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**